# பாலபோத இலக்கணம்

(முதற் புத்தகம்)

Approved by the Text-Book Committee, Madras.
Vide Page 548, Fort. St. George Gazette, Part I B, Dated 1–11–1927.

AN

# ELEMENTARY
# TAMIL GRAMMAR.

## BOOK - I.

## பால போத இலக்கணம்.

முதற் புஸ்தகம்.

by

A. KARMEGA KONAR,
Lecturer in Tamil, American College, Madura,
Member of the Board of Studies in Tamil,
University of Madras.

EIGHTH EDITION

E. M. GOPALAKRISHNA KONE,
MADURA & MADRAS.

Rights Reserved.] 1932. [Price ? Annas.

# முகவுரை.

நமது தமிழ் மொழி சிறந்த இலக்கண வரம்புடையது. தமிழ் மொழி கற்கப் புகும் மாணவர்கள் கீழ் வகுப்புக்களிலிருந்தே இலக்கண அறிவு பெற முயல வேண்டும். பெறுவிடில் பின்பு அவர்கள் செய்யுட் பாடங்களைப் படிப்பதிலும், வசன நடைகள் எழுதுவதிலும் பல இடர்ப்பாடுகளை அனுபவிக்கவேண்டி வரும். இம் முறையைக் கைக்கொள்ளாத காரணத்தினாலேயே கல்லூரி (college Students) மாணவருள்ளும் பலர் தமிழ் வசன நடையைச் சந்தி வழு, பால் திணை முடிபு வழுக்களின்றி எழுதி முடிக்க இயலாது இடர்ப்படுதலைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

இக் குறைகள் நம் மாணவர்களிடத்தினின்றும் அகலவேண்டுமாயின் அவர்கள் அடிப்படையாகக் கீழ் வகுப்புக்களிலிருந்தே இலக்கண பாடங்களைப் போற்ற வேண்டும். அவர்கட்கேற்ற சுலபமான இலக்கண பாட புத்தகங்கள் பல படிப்படியாகப் பல்க வேண்டும்.

யான் இவை கருதியே இலக்கண நூலில் முதலாவதாக அறிய வேண்டிய எழுத்து, சொல் என்ற பாகு பாட்டில் இளைஞர்க்கு வேண்டிய பகுதிகள் எவையோ அவற்றை மாத்திரம் எடுத்துத் தற்காலத்தில் வேண்டப்பெறும் புதிய முறையில் சுலபமாகவும், விளக்கமாகவும் அமைத்துத் தகுந்த உதாரணங்களோடும், பயிற்சிகளோடும் எழுதி, இந்தப் பால போத இலக்கணமென்னும் சிறிய நூலை வெளிப்படுத்தியுள்ளேன். இது பால போத இலக்கண வரிசையில் (Elementary Grade in Grammar) முதற் புத்தகமாகும்.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும் சிறுவர்கள் தமிழ் இலக்கணப் பயிற்சியும், இலக்கண பாடங்களில் உற்சாகமும் பெற்று விளங்குவார்கள் என்பது எனது துணிபு.

இங்ஙனம்,

ஆ. கார்மேகக் கோன்.

# பொருளடக்கம்.


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 எழுத்தியல் | ... | ... | 5 |
| (1) உயிர் எழுத்து | .... | .... | 6 |
| (2) மெய் எழுத்து | ... | ... | 8 |
| (3) உயிர்மெய் எழுத்து | ... | ... | 10 |
| (4) ஆய்த எழுத்து | .... | .... | 12 |
| 11 சொல்லியல் | ... | ... | 14 |
| (1) பெயர்ச் சொல் | ... | ... | 14 |
| (2) வினைச்சொல் | ... | ... | 31 |
| (3) இடைச்சொல் | ... | ... | 43 |
| (4) உரிச்சொல் | ... | ... | 44 |
| 111 புணரியல் | ... | ... | 45 |
| (1) உயிரீற்றுப் புணர்ச்சி | ... | ... | 47 |
| (2) மெய்யீற்றுப் புணர்ச்சி | ... | ... | 49 |
| IV தொடர்மொழி இயல் | ... | ... | 51 |
| (1) தொடர் | ... | ... | 51 |
| (2) எழுவாய் | .... | ... | 52 |
| (3) பயனிலை | ... | ... | ,, |
| (4) செயப்படுபொருள் | ... | ... | 55 |

ஸ்ரீ

# பால போத இலக்கணம்.

## (வினு விடை.)

---

## 1. எழுத்தியல்.

1.—இலக்கணம் என்றால் என்ன?

ஒரு பாஷையைப் பிழையின்றித் திருத்தமாகப் பேசவும் எழுதவும் நமக்குப் போதிக்கும் நூல் இலக்கணமாகும்.

2.—தமிழ்ப் பாஷையில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப் படும்?

தமிழ்ப் பாஷையில் உள்ள எழுத்துக்கள் நான்கு வகைப்படும்.

3.—அவை எவை?

அவை 1. உயிர் எழுத்து, 2. மெய் எழுத்து, 3. உயிர்மெய் எழுத்து, 4. ஆய்த எழுத்து என்பனவாம்.

### பயிற்சி—1.

(1) *இலக்கணம் என்று சொல்வது எதனை?*

(2) *தமிழ் மொழியிலுள்ள நான்குவகை எழுத்துக்களின் பெயரைச் சொல்லுக.*

## 1. உயிர் எழுத்து.

4.—உயிர் எழுத்து என்றால் என்ன?

வேறு எழுத்துக்களின் உதவி வேண்டாமல் தானே ஒலிக்கவல்ல எழுத்து உயிர் எழுத்தாம்.

5.—அந்த உயிர் எழுத்துக்கள் எவை? எத்தனை?

அ—ஆ, இ—ஈ, உ—ஊ, எ—ஏ, ஐ, ஒ-ஓ, ஔ என்னும் பன்னிரண்டுமாம்.

6.—இந்தப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களையும் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

1. குற்றெழுத்து, 2. நெட்டெழுத்து, 3. சுட்டெழுத்து, 4. வினாவெழுத்து என்று பிரிக்கலாம்.

7.—அவற்றுள் குற்றெழுத்துக்கள் எவை?

அ, இ, உ, எ, ஒ, என்னும் இவ்வைந்துங் குற்றெழுத்துக்களாம்.

குறிப்பு:—*இவை குறுகிய ஓசையை உடைய எழுத்துக்களாகையால்* குற்றெழுத்து *என்று பெயர் பெற்றன. இவை* குறில் *எனவும் சொல்லப்படும்.*

8.—நெட்டெழுத்துக்கள் எவை?

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெட்டெழுத்துக்களாம்.

குறிப்பு:—இவை ஏழும் நீண்ட ஓசை யுடையவை யாகையால் நெட்டெழுத்து என்று பெயர் பெற்றன. இவை நெடில் எனவும் பெயர் பெறும்.

9.—சுட்டெழுத்து எவை?

**அ - இ - உ இம்மூன்று எழுத்துக்களும் சொற்களில் முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும்போது சுட்டெழுத்தாம்.**

(உம்) அவன் இவன் உவன்
அம் மனிதன் இப் புத்தகம் உப் பக்கம்

குறிப்பு:—சுட்டெழுத்துக்கள் சொல்லின் முதலில் நிற்கும்போது சொல்லுக்குள்ளேயும், சொல்லுக்கு வெளியிலேயும் நிற்கும். சுட்டிக்காட்டுதல் - ஒரு பொருளை ஒருவர்க்குக் குறித்துக் காட்டுவது. அ - தூரத்தில் இருக்கிற பொருளையும், இ - அருகில் இருக்கிற பொருளையும், உ - நடுவிலும் மேலேயும் பின்னேயும் இருக்கிற பொருளையும் குறித்துக் காட்டவரும். உகரச்சுட்டு செய்யுளில் மாத்திரம் வரும். இந்த எழுத்துக்கள் சுட்டிக் காட்டும் இடத்தில் அல்லாமல் மற்ற இடங்களில் சுட்டெழுத்தாகா. அரம், இல்லை, உயரம் இந்தச் சொற்களிலுள்ள இந்த எழுத்துக்கள் சுட்டெழுத்தல்ல.

10.—வினவெழுத்து எவை?

**ஆ-எ-ஏ-ஓ-யா என்னும் ஐந்து எழுத்துக்களும் வினப்பொருளை உணர்த்தும்போது வினவெழுத்துக்களாம். (யா-உயிர் மெய் எழுத்து)**

(உ-ம்) அவனா இவளா அதுவா (ஆ)
எவன் எவள் எது (எ)

| | | | |
|---|---|---|---|
| ஏவர் | ஏது | ஏன் | (ஏ) |
| அவரோ | அவளோ | அதுவோ | (ஓ) |
| யார் | யாவன் | யாது | (யா) |

குறிப்பு:—இந்த எழுத்துக்கள் வினாவில் வரும்போது எ, யா-இரண்டும் சொல்லுக்கு முதலிலும், ஆ, ஓ-இரண்டும் சொல்லுக்குக் கடையிலும் ஏ-இரண்டிடத்தும் நிற்கும்.

பயிற்சி—2.

(1) உயிரெழுத்துக்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
(2) ஒவ்வொரு வகையிலும் அடங்கியுள்ள எழுத்துக்களைச் சொல்லுக. *

## 2. மெய் எழுத்து.

11.—மெய்யெழுத்தென்றால் என்ன?

**உயிரெழுத்தோடு சேர்ந்தாலன்றித் தானே ஒலிக்காத எழுத்து மெய்யெழுத்தாம். அவை தம்மேலே புள்ளிகளைக்கொண்டிருக்கும்.**

குறிப்பு:—மெய்யெழுத்துக்கு மெய், ஒற்று, புள்ளி என்றும் பெயர்.

12.—மெய்யெழுத்துக்கள் எவை?

**க்-ங், ச்-ஞ், ட்-ண், த்-ந், ப்-ம், ய்-ர், ல்-வ், ழ்-ள், ற்-ன் இப்பதினெட்டும் மெய்யெழுத்தாம்.**

---

* உபாத்தியாயர்—சில வாக்கியங்களைக் கறுப்புப் பலகையில் எழுதி மாணாக்கர்களை அவற்றிலுள்ள உயிர் எழுத்துக்களையும் அவற்றுள் குற்றெழுத்து நெட்டெழுத்து, சுட்டெழுத்து, வினாவெழுத்துக்களையும் பிரித்தெழுதிக் காட்டச் செய்யவேண்டும்.

13.—மெய்யெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

(1) வல்லெழுத்து, (2) மெல்லெழுத்து, (3) இடையெழுத்து என மூன்று வகைப் படும்.

14.—வல்லெழுத்துக்கள் எவை?

க்-ச்-ட்-த்-ப்-ற் என்னும் ஆறும் வல்லெழுத்துக்களாம்.

15 —மெல்லெழுத்துக்கள் எவை?

ங்-ஞ்-ண்-ந்-ம்-ன் என்னும் ஆறும் மெல்லெழுத்துக்களாம்.

16.—இடையெழுத்துக்கள் எவை?

ய்-ர்-ல்-வ்-ழ்-ள் என்னும் ஆறும் இடையெழுத்துக்களாம்.

குறிப்பு—வல்லெழுத்து-வன்மையாய் ஒலிப்பது. மெல்லெழுத்து-மென்மையாய் ஒலிப்பது. இடையெழுத்து-இவை இரண்டிக்கும் நடுத்தரமாய் ஒலிப்பது. இவை முறையே வல்லினம், மெல்லினம், இடையினம் எனவும் வன்கணம், மென்கணம், இடைக்கணம் எனவும் சொல்லப்படும்.

பயிற்சி — 3.

(1) மெய்யெழுத்துக்களை எல்லாம் வரிசையாய் எழுதி அவற்றை அவற்றின் பிரிவுப்படி பிரித்துக்காட்டு.

(2) ஒரு பிரிவுக்கு எத்தனை எழுத்து?

(3) மெய்யெழுத்து என்று அறிவதற்கு அடையாளம் என்ன?

(4) அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள மெய்யெழுத்துக்களை எடுத்துப் பிரிவுப்படி அட்டவணை அறையில் வரைந்து காட்டு.

(1) தகப்பனார் புதுப்புத்தகம் வாங்கினார்.
(2) பொன்னன் பந்து விளையாடினான்.
(3) பஞ்சினால் ஆடை நெய்கிறார்கள்.
(4) திங்கட்கிழமை பள்ளிக்கூடம்.
(5) பூக்களில் வண்டுகள் மொய்க்கும்.
(6) கிளிக்குஞ்சு பச்சை நிறமாயிருக்கும்.
(7) பாழ்ங்கிணற்றில் பாம்புகள் வசிக்கும்.

| சொல் | வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|---|
| | | | |

## 3. உயிர்மெய் எழுத்து.

17.—உயிர்மெய் எழுத்தென்றால் என்ன?

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்தாம்.

18.—உயிர்மெய் எழுத்துக்கள் எப்படிப் பிறக்கின்றன? அவை எத்தனை?

மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் ஒவ்வொரு மெய்யெழுத்தின்மேலும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தனித்தனி ஏறுவதனால் உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகின்றன. பதினெட்டு மெய்யோடும் பன்னிரண்டு உயிரையும் பெருக்க இருநூற்றுப்பதினாறாகும். $(18 \times 12 = 216)$

| | | |
|---|---|---|
| க் + அ = க | க் + உ = கு | க் + ஐ = கை |
| க் + ஆ = கா | க் + ஊ = கூ | க் + ஒ = கொ |
| க் + இ = கி | க் + எ = கெ | க் + ஓ = கோ |
| க் + ஈ = கீ | க் + ஏ = கே | க் + ஔ = கௌ |

குறிப்பு:—உயிர்மெய் எழுத்துக்கள் பிறக்கும் மாதிரியை இந்த அட்டவணையிற் காண்க. உயிர்மெய் எழுத்தில் மெய் முன்னும், உயிர் பின்னுமாக நிற்கும். இப்படியே 18 மெய்யின்மேலும் 12 உயிரும் தனித்தனி ஏற 216 உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாதலை 13 ஆம் பக்க அட்டவணையில் பார்க்க.

பயிற்சி—4.

(1) உயிர்க் குற்றெழுத்தை நீ தெரிந்ததைக்கொண்டு உயிர்மெய்க் குற்றெழுத்தைக் கணக்கிட்டு இத்தனையென்று சொல்லு.

(2) உயிர் நெட்டெழுத்தைக்கொண்டு உயிர்மெய் நெட்டெழுத்தைக் கணக்கிட்டு இத்தனை என்று சொல்லு.

(3) கீழ்வரும் எழுத்துக்களை உயிர் வேறு மெய் வேறு பிரித்தெழுது.

| | | | |
|---|---|---|---|
| ப | ணை | ரே | ஜெ |
| கோ | லெ | னெ | நெ |
| சை | ஞெ | ழு | ள |

(4) கீழ்வரும் எழுத்துக்களைச் சேர்த்து எழுது.

| | |
|---|---|
| க் + ஐ = | ஞ் + எ = |
| ப் + அ = | ல் + ஒ = |
| ட் + ஔ = | ர் + ஊ = |

19.—ஆய்த எழுத்தாவது?

உயிரும் ஆகாமல் மெய்யும் ஆகாமல் தனி நிலையுடையதாய்ச் சொல்லுக்கு நடுவில் மாத்திரம் வரும் ஓர் எழுத்தாம். அது மூன்று புள்ளி வடிவமாயிருக்கும்.

ஃ-அஃது இஃது எஃகு.

குறிப்பு:—கேடகம் என்னும் ஒரு வகை ஆயுதத்தில் தைத்துள்ள மூன்று ஆணியின் வடிவமாயிருப்பதால், இந்த எழுத்து ஆய்த எழுத்து என்று பெயர்பெற்றது.

20.—தமிழ்ப்பாஷையில் வந்து வழங்கும் வடமொழி எழுத்துக்கள் எவை? (வடமொழி—சம்ஸ்கிருதம்)

ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ என்னும் ஐந்து வடமொழி எழுத்துக்களும் தமிழில் வந்துவழங்கும் எழுத்துக்களாகும்.

(உ-ம்) ஜனங்கள், ஸர்ப்பம், விஷயம்;
ஹரி, ஹாரம், பக்ஷி.

21.—தமிழ்ப்பாஷையிலுள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?

தமிழ்ப்பாஷையிலுள்ள மொத்த எழுத்துக்கள், உயிர்-12, மெய்-18. உயிர்மெய்-216. ஆய்தம்-1. ஆக 247 எழுத்துக்கள்.

உயிர்—12.

| மெய் 18 | | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | + | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | + | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | + | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | + | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | + | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | + | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | + | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | + | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | + | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | + | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | + | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | + | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | + | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | + | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ள் | + | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ழ் | + | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ற் | + | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | + | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

குறிப்பு:— தடித்த எழுத்துக்கள் குற்றெழுத்து என்பதைக் குறிக்கும்.

## II. சொல்லியல்.

22.—சொல் என்றால் என்ன?

ஓர் எழுத்துத் தனித்து நின்றாவது, பல எழுத்துக்கள் சேர்ந்து நின்றாவது ஒரு பொருளைத் தருவது, சொல்லாம்.

குறிப்பு:—சொல், பதம், மொழி என்பன ஒரு பொருள் சொற்கள்.

(உ-ம்) பூ-தா-ஈ......ஓரெழுத்துப்பதம்.

அணி கலம்-பருப்பு......பல எழுத்துப்பதம்.

23.—தமிழ்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

(1) பெயர்ச்சொல், (2) வினைச்சொல், (3) இடைச்சொல், (4) உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

### I. பெயர்ச் சொல்.

24.—பெயர்ச்சொல்லாவது யாது?

ஏதாவது ஒரு பொருளைக் குறிப்பதற்கு வழங்கும் சொல் பெயர்ச்சொல்லாம்.

குறிப்பு:—இப்பெயர்கள் பொருள்களுக்குக் காரணம் பற்றியும் காரணமில்லாதும் இடப்பட்டு வழங்கும்.

25.—பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும் அவை எவை?

பெயர்ச்சொல்:— 1, பொருட்பெயர், 2. இடப்பெயர், 3. காலப்பெயர், 4. சினைப்பெயர், 5. குணப்பெயர், 6. தொழிற்பெயர் என ஆறு வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) 1. | பொன்னன், | ஆடு | மரம்......பொருட்பெயர். |
| 2. | நாடு, | ஊர், | காடு.........இடப்பெயர். |
| 3. | நாள், | செவ்வாய், | மாசி.........காலப்பெயர். |
| 4. | தலை, | கால், | கிளை.........சினைப்பெயர். |
| 5. | படித்தல், | வருகை, | கல்வி.....தொழிற்பெயர். |
| 6. | கருமை, | மாட்சி, | நன்று......குணப்பெயர். |

26.—பெயர்ச்சொல்லில் என்னென்ன பொருந்தியிருக்கும்?

பெயர்ச்சொல்லில்— 1. திணை, 2. பால், 3. எண், 4. இடம், 5. வேற்றுமை என்னும் ஐந்து விஷயங்கள் பொருந்தியிருக்கும்.

(1) திணை.

27.—அவற்றுள் திணை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

திணை என்றால் குலம்; அல்லது வகுப்பு என்று பொருள். அது 1. உயர்திணை 2. அஃறிணை என இரண்டு வகைப்படும்.

28.—உயர்திணை என்றால் என்ன?

உயர்ந்த குலம்; அதாவது தேவர்கள், மனிதர்கள் ஆகிய இவர்கள் உயர்திணை.

தேவர்— விஷ்ணு, முருகன், இந்திரன்.

மனிதர்—குறவன், அவன், கண்ணன்.

29.—அஃறிணை என்றால் என்ன?

தேவர் மக்கள் தவிர, உலகத்திலுள்ள மற்ற பொருள்களெல்லாம் அஃறிணையாம்.

*உயர்திணை அல்லாத திணை அஃறிணை; அல் + திணை = அஃறிணை.*

*மாடு, கோழி, மீன், மரம், வீடு, மலை, ஆறு, கல்.*

## (2) பால்.

30.—பால் என்பது என்ன? அது எத்தனை வகைப்படும்?

**பால் என்பது திணையின் பகுப்பு; (பிரிவு) அது ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்.**

31.—இந்த ஐந்து பால்களுள் உயர்திணைக்குரிய பால்கள் எவை?

**ஆண்பால், பெண்பால், பலர்பால், என்னும் மூன்றும் உயர்திணைக்குரிய பால்களாம்.**

(உ-ம்) ராமன் அவன்............ஆண்பால்
பொன்னி அவள்......பெண்பால்
மக்கள் அவர்கள்......பலர்பால்

அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?

**ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரிய பால்களாம்.**

(உ-ம்) ஆடு, மரம், மலை, அது......ஒன்றன்பால்.
ஆடுகள், மரங்கள், மலைகள் அவை...பலவின்பால்.

குறிப்பு:—*அஃறிணையில் பெட்டை சேவல், கடா-மறி. களிறு-பிடி என்று ஆண் பெண் பகுப்புப் பறவை மிருகம் முதலியவற்றுள் காணப்படினும் மண், கல் முதலியவற்றில் அவை காணப்படாமையால் அஃறிணையில் ஆண், பெண், பகுப்புக் கொள்வதில்லை. அஃறிணைப் பொருள்களில் ஒரு*

பொருள் ஆணுயிருப்பினும் பெண்ணுயிருப்பினும் ஒன்றன்பாலென்றும் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பலவின்பாலென்றும் சொல்வதே வழக்கம்.

## பயிற்சி-5.

1. அடியில் வரும் வாக்கியத்தில் உள்ள பெயர்ச்சொற்களை எடுத்துக் காட்டு.

இராமன் நாள்தோறும் பள்ளிக்கூடம்போய் நன்றாய்ப் படிப்பான். மாலைவேளையில் பந்து விளையாடுவான்.

2. பலகை, புத்தகங்கள், சேவல், யானை, பாகன், குதிரை வீரன், உபாத்தியாயர், தண்ணீர், ரங்கநாயகி, புறாக்கள், புழுக்கள், இப் பெயர்ச்சொற்களையும் உரிய திணை, பால்களையும் அடியில் வரும் அறைகளில் வரிசையாக வரைக.

| பெயர்ச்சொல் | திணை | பால் |
|---|---|---|
| | | |

## (3) எண்.

33.—எண் என்பது என்ன?

எண் என்பது பொருள்களின் எண்ணிக்கை; (அளவு) அது ஒன்று, அல்லது ஒன்றுக்கு அதிகப்பட்டது என்பதை விளக்கும்.

54.—அந்த எண் எத்தனை வகைப்படும்?

ஒருமை, பன்மை என இருவகைப்படும். ஒன்றைத் தெரிவிப்பது ஒருமை. ஒன்றுக்கு அதிகமானவற்றைத் தெரிவிப்பது பன்மை.

| ஒருமை | பன்மை |
| --- | --- |
| மனிதன் | மனிதர் |
| கை | கைகள் |
| மாடு | மாடுகள் |
| அது | அவை |
| மலை | மலைகள் |

5.—மேற்கூறிய ஐந்து பால்களுள் ஒருமைக்கு உரிய பால்கள் எவை? பன்மைக்கு உரிய பால்கள் எவை?

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், ஆகிய மூன்றும் ஒருமைக்குரியன; பலர்பால், பலவின்பால் இரண்டும் பன்மைக்குரியன.

பயிற்சி—6.

(1) உயர்திணையில் பன்மைக் குரிய பால் எது? அஃறிணையில் ஒருமைக்குரிய பால் எது?

(2) ஒருமை, பன்மைகளுக்குச் சில உதாரணங்கள் சொல்லு.

## (4) இடம்.

36.—இடம் என்றால் என்ன? அது எத்தனை வகை?

இடம் என்பது சொற்கள் வழங்கும் தானம்; அது-1. தன்மை, 2. முன்னிலை, 3. படர்க்கை என மூன்று வகையாம்.

பேசுவோன்—தன்மை இடம்:
முன்னின்று கேட்போன்—முன்னிலை இடம்.
பேசப்படுவோன், பேசப்படுபவை-படர்க்கைஇடம்.

குறிப்பு—தன்மை முன்னிலைப் பெயர்களைக் கொண்டு திணை பால் அறிய முடியா ஒருமை பன்மை அறியலாம். படர்க்கைப் பெயர்கள் திணை பால்களை உணர்த்தும். படர்க்கைப் பெயருக்கு இத்தன்மைவாய்ந்தது அன் ஆன் முதலிய பால் உணர்த்தும் விகுதி அமைப்பினால் என அறிக. தன்மை, முன்னிலை இருதிணைக்கும் பொது.

| | | |
|---|---|---|
| தன்மை | நான், யான்........ | ஒருமை |
| | நாம்: யாம்........ | பன்மை |
| முன்னிலை | நீ, | ஒருமை |
| | நீர், நீங்கள்—.... | பன்மை |
| படர்க்கை | அவன், அவள், அது- | ஒருமை |
| | அவர், அவை,........ | பன்மை |

### பயிற்சி—7.

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களை எடுத்து அடியில்குறித்திருக்கும் அறைகளில்ஏற்றபடிபொருத்து.

1. நான் இன்று பள்ளிக்கூடம் போனேன்.

2. நாங்கள் நாளைக்கு ஊருக்குப் போவோம்.

3. நீ தினந்தோறும் கடவுளைத் தொழு.

4. நீங்கள் எப்போது வருவீர்கள்?

5. அவன் கெட்ட பையன்.

6. வயலில் எருது உழும்.

| தன்மை | | முன்னிலை | | படர்க்கை | |
|---|---|---|---|---|---|
| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
| | | | | | |

## (5) வேற்றுமை.

37.—வேற்றுமை என்றால் என்ன? அது எத்தனை?

தன்னை ஏற்ற பெயர்ச்சொற்களின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம். அது முதல் வேற்றுமைமுதலாக எட்டாம் வேற்றுமைவரை எட்டுவகைப்படும்.

குறிப்பு:—இங்கே வேற்றுமை செய்வது என்பது இயற்கையாய்நின்ற பெயர்ப்பொருளை வெவ்வேறு வகையாய்த் தொழிற் படுத்துதல். வேற்றுமை என்றது வேற்றுமை செய்யும் உருபுகளை, இவ்வுருபுகள் பெயர்ச் சொற்களினீற்றில் நிற்கும். இவ்வுருபுகள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் இல்லை.

(முதல் வேற்றுமை.)

38.—முதல் வேற்றுமையாவது யாது ?

ஒரு பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமை ; அது பெயர் வேற்றுமை எனவும், எழுவாய் வேற்றுமை எனவும் பெயர் பெறும்.

(உ-ம்) இராமன் .... .... படித்தான்
சாத்தன் .... .... வந்தான்

இவற்றில் இராமன், சாத்தன் முதல் வேற்றுமை. இப்பெயர் வேறுபடாமல் இயல்பாயிருத்தல் காண்க.

(இரண்டாம் வேற்றுமை.)

39.—இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன ?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம். இவ்வேற்றுமை செயப்படு பொருள் வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

(உ-ம்) கந்தன் மரத்தை வெட்டினான் .... (ஐ)
குயவன் குடத்தைச் செய்தான் .... (ஐ)

மூன்றாம் வேற்றுமை.

40.—மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் எவை ?

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஓடு என்பதாம்.

(உ-ம்) தச்சனால் கோயில் கட்டப்பட்டது (ஆல்)
வாளான் மரத்தை வெட்டினான் (ஆன்)
தந்தையோடு மகன் வந்தான் .... (ஓடு)

குறிப்பு :—ஆல் உருபுக்குக் கொண்டு என்பதும் ஒடு உருபுக்கு உடன் என்பதும் சொல்லுருபாக வருதலு முண்டு.

(உ-ம்) வாள்கொண்டு வெட்டினன் .... (கொண்டு)
தந்தையுடன் மகன் வந்தான். .... (உடன்)

(நான்காம் வேற்றுமை.)

41.—நான்காம் வேற்றுமையின் உருபுகள் எவை?

நான்காம் வேற்றுமையின் உருபு, கு என்பதாம்.

(உ-ம்) இராசனுக்குக் கொடுத்தான் .... (கு)

(ஐந்தாம் வேற்றுமை.)

42.—ஐந்தாம் வேற்றுமையின் உருபு யாது?

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இன் இல், நின்று, இருந்து என்பனவாம்.

(உ-ம்) ஊரின் நீங்கினன் .... (இன்)
கல்வியில் பெரியவன் கம்பன் .... (இல்)
நான் வீட்டினின்று வந்தேன் .... (நின்று)
வண்டியிலிருந்து இறங்கினன் .... (இருந்து)

குறிப்பு :—இவ்வுருபுகளில் நின்று, இருந்து இரண்டும் சொல்லுருபுகள்.

(ஆறும் வேற்றுமை.)

43.—ஆறும் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, உடைய என்பனவாம்.

(உ-ம்) எனது புத்தகம் .... .... (அது)
தனது கை .... .... (ஆது)
இராமனுடைய பலகை .... (உடைய)

குறிப்பு:—உடைய என்பது சொல்லுருபு.

(ஏழாம் வேற்றுமை.)

44.—ஏழாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

*ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், கண், உள், இடம் என்பனவாம்.*

(உ-ம்) தம்பி வீட்டில் இருந்தான் .... .... (இல்)
ஊரின் கண் கோயிலுண்டு .... .... (கண்)
கிளி கூட்டுள் இருக்கிறது .... .... (உள்)
இராமனிடம் பேசினேன் .... .... (இடம்)

(எட்டாம் வேற்றுமை.)

45.—எட்டாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

*படர்க்கைப் பெயரீற்றில் ஏ-ஓ மிகுதலும், ஈறு திரிதலும், ஈறுகெடுதலும், இயல்பாதலும், ஈற்றயல் எழுத்துத் திரிதலுமாம்.*

(உ-ம்) மகனே கேள் (ஏ மிகுந்தது)
ராமனோ வாராய் (ஓ மிகுந்தது)
பிள்ளாய் படி (ஈறு திரிந்தது)
தோழ சொல்லாய் (ஈறு கெட்டது)
தம்பி வா (ஈறு இயல்பாயிற்று)
மக்காள் படியுங்கள் (ஈற்றயல் எழுத்துத்திரிந்தது)

குறிப்பு:—படர்க்கைப் பெயர்களைத் தன்முகமாகக் கூப்பிடும்போது பெயர்கள் அடையும் விகாரமே எட்டாம் வேற்றுமை என்று அறியவேண்டும். இது விளி வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

பயிற்சி—8

(1) கீழ்வரும் சொற்களில் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்த்தெழுது.

பட்டம், பானை, புலி, கை, மரம், காடு, ஆறு, காளை.

(2) மூன்றும் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து மூன்று பெயர்ச் சொற்கள் எழுது.

(3) கடைக்குப்போய் எனக்குப் பாக்கு வாங்கு.
இவ்வாக்கியத்திலுள்ள நான்காம் வேற்றுமைச் சொற்களை எடுத்துக்காட்டு.

(4) அடியில் வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் ஐந்தாம் வேற்றுமை உருபைச் சேர்த்தெழுது.

(1) அப்பா ஊர்—வந்தார்.

(2) நான் பள்ளிக்கூடத்தில்—வந்தேன்.

(5) அடியில்வரும் சொற்களில் ஆறும் வேற்றுமை உருபுகளை எடுத்துச் சொல்லு.

(1) கண்ணனது பந்து.

(2) அது என்னுடைய புத்தகம்,

(6) அடியில்வரும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு எவை?

(1) அநேகர் சண்டையில் இறந்தனர்.

(2) காட்டின் கண் சிங்கம் வாழும்.

(3) பெட்டியுள் சட்டை இருக்கிறது.

(7) கீழ்வரும் சொற்களில் எட்டாம் வேற்றுமைச் சொற்கள் எவை?

(1) அம்மா என் புத்தகத்தைக்கொடு.

(2) தங்கையே ஓடி வா.
[உருபேற்கும்போது வேறுபடும் பெயர்கள்.]

46—யான் என்னும் தன்மைப்பெயர் வேற்றுமை உருபேற்றல் எவ்வாறாகும்?

யான் என்னும் பெயர் வேற்றுமை உரு பேற்கும்போது என் என்று திரியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | யான் | | 5. | என்னின் | (இன்) |
| 2. | என்னை | (ஐ) | 6. | எனது | (அது) |
| 3. | என்னால் | (ஆல்) | 7. | என்னில் | (இல்) |
| 4. | எனக்கு | (கு) | 8. | ................ | (....) |

குறிப்பு:—நான் என்னும் தன்மைப் பெயர் யான் என்னும் தன்மைப் பெயர்போல் இரண்டாம் வேற்றுமை முதலிய வேற்றுமை உருபை ஏற்காது.

47.—நாம், யாம் என்னும் தன்மைப் பெயர் உரு பேற்றல் எவ்வாறாகும்?

நாம், யாம் என்னும் தன்மைப் பெயர்கள் உருபேற்கும்போது நாம் என்பது நம் எனவும் யாம் என்பது எம் எனவும் திரியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | நாம் | | 5. | நம்மின் | (இன்) |
| 2. | நம்மை | (ஐ) | 6. | நமது | (அது) |
| 3. | நம்மால் | (ஆல்) | 7. | நம்மில் | (இல்) |
| 4. | நமக்கு | (கு) | 8. | .................. | (....) |

| | | | |
|---|---|---|---|
| 1. யாம் | 5. எம்மின் | (இன்) |
| 2. எம்மை (ஐ) | 6. எமது | (அது) |
| 3. எம்மால் (ஆல்) | 7. எம்மில் | (இல்) |
| 4. எமக்கு (கு) | 8. ........................ | (...) |

48.—நீ, நீர், என்னும் முன்னிலைப்பெயர்கள் உருபேற்கும் போது எவ்வாறாகும்?

*நீ, நீர், என்னும் இப்பெயர்கள் உருபேற்கும்போது நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும் திரிந்துவரும்.*

| | | | |
|---|---|---|---|
| 1. நீ | 5. உன்னின் | (இன்) |
| 2. உன்னை (ஐ) | 6. உனது | (அது) |
| 3. உன்னால்(ஆல்) | 7. உன்னில் | (இல்) |
| 4. உனக்கு (கு) | 8. ..................... | (....) |
| 1. நீர் | 5. உம்மின் | (இன்) |
| 2. உம்மை (ஐ) | 6. உமது | (அது) |
| 3. உம்மால் (ஆல்) | 7. உம்மில் | (இல்) |
| 4. உமக்கு (கு) | 8 ..................... | (....) |

*குறிப்பு:—மேலே காட்டிய தன்மைப்பெயரும், முன்னிலைப் பெயரும் மேல்வரும் தான், தாம் என்னும் படர்க்கைப் பெயரும் எட்டாம் வேற்றுமையாகிய விளி உருபை ஏலா; ஆகையால் உதாரணமில்லை.*

49.—தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது எவ்வாறாகும்?

*தான், தாம் என்னும் பெயர்கள் உருபேற்றால் தான் என்பது தன் எனவும், தாம் என்பது தம் எனவும் திரிந்துவரும்.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம் 1 தான் | | 5 | தன்னின் | (இன்) |
| 2 தன்னை | (ஐ) | 6 | தனது | (அது) |
| 3 தன்னால் | (ஆல்) | 7 | தன்னில் | (இல்) |
| 4 தனக்கு | (கு) | 8 | ...................... | (...) |

குறிப்பு:—*இப்படியே தம் என்பதனோடும் கூட்டுக. தனக்கு என்பதில் அ சாரியை.*

50.—அகரத்தை இறுதியிலேயுடைய பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபேற்றால் எவ்வாறாகும்?

*அகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் உருபேற்றால் அற்று என்னும் சாரியை பெறும்.*

(உ-ம்) பல + அற்று + ஐ = பலவற்றை
சில + அற்று + ஆல் = சிலவற்றால்

குறிப்பு:—*இப்படியே மற்ற உருபுகளையும் சேர்த்துக் கொள்க.*

51.—மகரத்தை இறுதியிலேயுடைய பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபேற்றால் எவ்வாறாகும்?

*மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபேற்றால் அம் கெட அத்து என்னும் சாரியை பெறும்.*

(உ-ம்) மரம் + அத்து + ஐ = மரத்தை
அரம் + அத்து + ஆல் = அரத்தால்

மரம்-அம் கெட மர் என நிற்கும். அத்துவர(மர் + அத்து) மரத்து என்றாகி ஐ உருபு சேர மரத்தை என்றாகும்.

52.—எல்லாம் என்னும் பெயர் வேற்றுமை உரு பேற்றால் எவ் வாறதும்?

எல்லாம் என்னும் பெயர், வேற்றுமை உரு பேற்றால் ஈற்றில் நின்ற மகரம் கெட, அற்றுச் சாரியையும் வேற்றுமை உருபின் மேல் உம்மும் பெறும்.

(உ-ம்) எல்லாம் + அற்று + ஐ = எல்லாவற்றையும்
எல்லாம் + அற்று + ஆல் = எல்லாவற்றாலும்

{எல்லாம் + ஐ = எல்லா + அற்று + ஐ + உம் = எல்லா வற்றையும்.}

53—அவ் இவ் என்னும் சுட்டுப் பெயரும் எவ் என்னும் வினாப் பெயரும் உரு பேற்றால் எவ்வாறதும்?

இப்பெயர்கள் உருபேற்றால் அற்றுச் சாரியைபெறும்.

(உ-ம்) அவ் + அற்று + ஐ = அவற்றை
இவ் + அற்று + ஆல் = இவற்றால்
எவ் + அற்று + ஐ = எவற்றை

குறிப்பு:—இப்படியே இவற்றை மற்ற உருபுகளோடும் சேர்த்துப் பார்க்க.

54.—அவை, இவை என்னும் வை, ஈற்றுச் சுட்டுப் பெயர்களும் எவை என்னும் வினாப்பெயரும் உருபேற்றல் எவ்வாறாகும்?

அவை இவை என்னும் சுட்டுப் பெயர்களும் எவை என்னும் வினாப்பெயரும் உருபேற்றால் இறுதியில் உள்ள ஐகெட்டு அவ், இவ், எவ் என நின்று அற்றுச்சாரியை பெறும்.

(உம்)அவை = ஐ = (அவ் + அற்று + ஐ) = அவற்றை
இவை = ஐ = (இவ் + அற்று + ஐ) = இவற்றை
எவை = ஐ = (எவ் + அற்று + ஐ) = எவற்றை

55.—ஒருபெயருக்கு எப்படிச் சொல்லிலக்கணம் கூறவேண்டும்?

ஒரு பெயர்ச் சொல்லுக்குச் சொல்லிலக்கணம் கூறினால் திணை, பால், இடம், எண், வேற்றுமை ஆகிய இவற்றையும், அதன் முடிபையும் எடுத்துக் காட்டவேண்டும்.

கண்ணன் பள்ளிக்கூடத்திற்கு வந்தான்

இதில் கண்ணன் உயர்திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமை. வந்தான் என்னும் வினைப்பயனிலைக்கு எழுவாயாக நின்றது.

---

பயிற்சி—9.

1 தன்மை ஒருமைப் பெயர் ஒன்றெழுதி ஒரு வேற்றுமை உருபைக் கூட்டி, அது அடையும்திரிபுப்படி எழுதிக் காட்டுக.

2. 'எங்களால்' இது வேற்றுமை உருபை ஏற்பதற்குமுன் எப்படியிருக்கும்?

3. (1) புத்தகத்தை, (2) அவற்றிற்கு; இவற்றில் சொல் வேறு சாரியை வேறு உருபு வேறாகப் பிரித்து எழுது.

## 2: வினைச்சொல்.

56. நால்வகைச் சொற்களில் வினைச்சொல்லாவது யாது?

ஒரு பொருளின் தொழிலைத் தெரிவிக்கும் சொல் வினைச்சொல்லாம்.

இராமன் வந்தான்.

இதில் வந்தான் என்னுஞ்சொல் இராமன் என்னும் பொருள் செய்த தொழிலாகிய வந்ததைத் தெரிவித்துநிற்றலால் வந்தான் என்பது வினைச்சொல்லாம்.

57.—பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

(1) பெயர்ச்சொல்லும் திணை, பால், இடங்களைக் காட்டும். வினைச்சொல்லும் திணை, பால், இடங்களைக் காட்டும்.

(2) பெயர்ச்சொல் வேற்றுமை உருபை ஏற்றுவரும், வினைச்சொல் வேற்றுமை உருபை ஏற்காது.

(3) பெயர்ச்சொல் காலங்காட்டாது. வினைச்சொல் காலங்காட்டும். இவையே இவைகளுக்குள்ள ஒற்றுமை வேற்றுமை.

இராமன் வந்தான்.

இதில் வந்தான் என்னும் வினைச்சொல் உயர்திணையையும், ஆண்பாலையும், படர்க்கை இடத்தையும் தொழில் நடந்து விட்டதையும் காட்டியது, அது வேற்றுமை உருபை ஏற்கவில்லை.

58.—காலமாவது யாது? அது எத்தனை வகைப்படும்?

காலமாவது ஒரு பொருளின் தொழில் நடைபெறுங் காலம். அது.

1, இறந்த காலம்,
2. நிகழ் காலம்,
3. எதிர் காலம்

என மூவகைப்படும்.

குறிப்பு:-வினைச் சொற்களில் காலத்தைக் காட்டுவன இடையில் நிற்கும் சில எழுத்துக்கள். அவற்றிற்கு இடை நிலைகள் என்று பெயர்.

59.—இறந்த காலமாவது யாது?

ஒரு பொருளின் தொழில் முன்னமே நடந்துவிட்ட காலம் இறந்த காலமாம்.

(உ-ம்) படித்தான், உண்டான், சென்றான்.

60.—இறந்த காலங் காட்டும் இடை நிலைகள் எவை?

த்-ட்-ற்-இன் என்பவை இறந்தகாலங் காட்டும் இடை நிலைகளாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | செய்தான் | செய் + த் + ஆன |
| | தின்றான் | தின் + ற் + ஆன் |
| | உண்டான் | உண் + ட் + ஆன் |
| | ஓடினான் | ஓடு + இன் + ஆன் |

91.—நிகழ்காலமாவது யாது?

ஒரு பொருளின் தொழில் முடிவு பெருமல் நடந்துகொண்டிருக்குங் காலம் நிகழ்காலமாம்.

(உ-ம்) செய்கிருன்—உண்கின்ருன்—தின்ருநின்ருன்.

62.—நிகழ்காலங் காட்டும் இடை நிலைகள் எவை?

கிறு-கின்று-ஆநின்று என்னும் மூன்றும் நிகழ்கால இடை நிலைகளாம்.

(உ-ம்) செய்கிருன் .... செய் + கிறு + ஆன
உண்கின்ருன் .... உண் + கின்று + ஆன்
தின்ருநின்ருன் .... தின் + ஆநின்று + ஆன்

63.—எதிர் காலமாவது யாது?

ஒரு பொருளில் தொழில் இனி நடக்கப் போகிற காலம் எதிர்காலமாம்.

(உ-ம்) படிப்பான்—செய்வான்.

64.—எதிர் காலங் காட்டும் இடை நிலைகள் எவை?

ப்-வ் என்னும் இரண்டும் எதிர்காலங் காட்டும் இடைநிலைகளாம்.

(உ-ம்) தின்பான் .... தின் + ப் + ஆன்
செய்வான் .... செய் ÷ வ் + ஆன்

குறிப்பு:— இவ் விடை நிலைகளுள் ஏதாவது ஒன்று வினைச்சொற்களுக்கு இடையே நிற்கும். அந்தந்தக்காலத்தைக்காட்டும் சொற்களின் இடையில் நிற்பது இடைநிலை. முதலில் நிற்பது பகுதி. கடையில் நிற்பது விகுதி.

65:—வினைச்சொற்களில் இடை நிலைகளன்றி வேறு எவை காலங் காட்டும்?

வினைச் சொற்களில் இடை நிலைகளன்றிச் சில பகுதியும் விகுதியும் காலங்காட்டும்.

(உ-ம்) புக்கான் } புகு, தோடு என்ற பகுதி
தோட்டான் } இறந்தகாலங் காட்டின.
ஓடும் } உம் விகுதி எதிர் காலம்
வரும் } காட்டிற்று.
தின்னும் }

குறிப்பு:— பகுதி காலங்காட்டினால் புகு என்பது புக்கு என்றும் தொடு என்பது தொட்டு என்றும் பகுதி இரட்டித்தே காலங்காட்டும். இந்தப் பகுதி, மூன்று காலங்களில் இறந்தகாலத்தை மட்டும் காட்டும்.

பயிற்சி—10.

1. வினைச்சொல் என்றால் என்ன? ஓர் உதாரணத்தால் அதனை விளக்கிச் சொல்.

2. பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் உள்ள பேதம் என்ன?

3. காலம் எத்தனை? அவற்றைக்காட்டும் இடைநிலைகளைச் சொல்லு.

4. போவோம். படிக்கிறான். செய்வான் இவற்றில் இடைநிலைகளைப் பிரித்துக் காட்டு.

5. அடியில் வரும் வினைச்சொற்களுக்குரிய திணை பால் இடம் காலம் இவற்றை அட்டவணையில் எடுத்தெழுதி அமைத்துக் காட்டு.

ஓடினான், படிக்கிறேன், நடக்கிறான், வருகிறது, செய்வோம்.

| சொல் | திணை | பால் | இடம் | காலம் |
|---|---|---|---|---|
| | | | | |

66.—வினைச்சொல்லைப் பிரித்தால் முதலில் நிற்பதற்குப் பெயரென்ன?

வினைச் சொல்லில் முதலில் நிற்பதற்குப் பகுதி என்று பெயர்.

| (வினைச் சொற்கள்) | | | (பகுதி) |
|---|---|---|---|
| படித்தான் | .... | .... | படி |
| கண்டேன் | .... | .... | காண் |
| அழுதான் | .... | .... | அழு |
| தின்றது | .... | .... | தின் |
| ஓடின | ... | .... | ஓடு |

குறிப்பு:-வினைச்சொல்லின் பகுதிகள் பொருள்களின் தொழிலைக் காட்டும்.

67.—வினைச்சொல்லைப் பிரித்தால் கடையில் (ஈற்றில்) நிற்பதற்குப் பெயரென்ன?

வினைச் சொல்லில் கடையில் நிற்பதற்கு விகுதி என்று பெயர்.

| (வினைச்சொற்கள்) | | | (விகுதி) |
|---|---|---|---|
| செய்தேன் | .... | .... | என் |
| செய்தோம் | .... | .... | ஓம் |
| செய்தான் | .... | .... | ஆன் |
| செய்தார் | .... | .... | ஆர் |
| செய்தாள் | .... | .... | ஆள் |
| செய்தது | .... | .... | து |
| செய்தன | .... | .... | அ |

பயிற்சி—11.

1. *பகுதி என்றால் என்ன?*
2. *விகுதி என்றால் என்ன?*
3. *பிடித்தான், அடித்தான், சிரித்தான், கண்டது. இவ் வினைச் சொற்களில் பகுதியையும், விகுதியையும் எடுத்துத் தனித்தனி எழுது.*

68:— வினைச்சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

(1) வினைமுற்று, (2) வினையெச்சம், (3) பெயரெச்சம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

69:— வினை முற்றுவது யாது?

விகுதிகளால் திணை பால் இடங்களைக் காட்டிப் பொருள்களின் தொழில் முற்றுப் பெற்ற நிலையை உணர்த்தும் சொல் வினைமுற்றாம்.

70:—வினைமுற்று எத்தனை வகைப்படும்?

(1) தன்மை வினைமுற்று, (2) முன்னிலை வினைமுற்று, (3) படர்க்கை வினைமுற்று,

(4) ஏவல் வினைமுற்று, (5) வியங்கோள்வினை முற்று என ஐந்துவகைப்படும்.

71:— தன்மை வினைமுற்றவது யாது?

ஏன் ஓம் முதலிய விகுதிகளை ஈற்றிலே கொண்டிருக்கும் வினைச்சொல் தன்மைவினை முற்றாம்.

| | |
|---|---|
| 1. நடந்தேன் | இதில் ஏன் என்பது முன்னிலை ஒருமையைக் காட்டிற்று. |
| 2. நடந்தோம் | இதில் ஓம் என்பது தன்மைப்பன்மையைக் காட்டிற்று. |

72:—முன்னிலை வினைமுற்றவது யாது?

ஆய் ஈர் என்னும் விகுதிகளை ஈற்றிலே கொண்டிருக்கும் வினைச்சொல் முன்னிலை வினை முற்றாம்.

| | |
|---|---|
| 1. நடந்தாய் | இதில் ஆய் என்பதுமுன்னிலைஒருமையைக் காட்டிற்று. |
| 2. நடந்தீர் | இதில்ஈர் என்பதுமுன்னிலைப்பன்மையைக் காட்டிற்று. |

குறிப்பு:— தன்மை வினைமுற்றிலும் முன்னிலை வினைமுற்றிலும்,

(1) தன்மை ஒருமை (1) முன்னிலை ஒருமை

(2) தன்மைப்பன்மை (2) முன்னிலைப்பன்மை.

என இரண்டிரண்டு வகை உண்டு.

73.—படர்க்கை வினைமுற்றவது யாது?

ஆன், ஆள், ஆர், து, அ. என்னும்விகுதிகளையுடைய வினைச்சொற்கள் படர்க்கைவினைமுற்றாம்.

| | |
|---|---|
| நடந்தான் | இதில் ஆன் என்பது உயர்திணை ஆண் பால் படர்க்கையைக் காட்டிற்று. |
| நடந்தாள் | இதில் ஆள் என்பது உயர்திணைப் பெண் பால் படர்க்கையைக் காட்டிற்று. |
| நடந்தார் | இதில் ஆர் என்பது உயர்திணைப் பலர் பாலைக் காட்டிற்று. |
| நடந்தது | இதில் து என்பது அஃறிணை ஒன்றன் பாலைக் காட்டிற்று. |
| நடந்தன | இதில் அ என்பது அஃறிணைப் பலவின் பாலைக் காட்டிற்று. |

குறிப்பு.—*படர்க்கை வினை முற்று (1) ஆண் பால் படர்க்கை (2) பெண்பால் படர்க்கை (3) பலர்பால் படர்க்கை (4) ஒன்றன்பால் படர்க்கை (5) பலவின்பால் படர்க்கை என ஐந்து வகைப்படும்.*

74.—வியங்கோள் வினைமுற்று என்றால் என்ன?

*மரியாதையாக ஏவுதலில் வரும் வினைச் சொல்லாம். க, அ என்ற விகுதியை ஈற்றில் கொண்டிருக்கும்.*

| | |
|---|---|
| வாழ்க<br>வருக | இவற்றில் க மரியாதையான ஏவலைக் காட்டிலிற்று. |

குறிப்பு:—*இந்த வினைமுற்று எல்லாத்திணை, பால் இடங்களுக்கும் வரும்.*

75. ஏவல் வினை முற்று என்றால் என்ன?

*ஆய் விகுதியோடுகூடி நின்று, ஏவற்பொருளைத் தரும் வினைச்சொல், ஏவல் வினைமுற்றும்.*

நடவாய் } இதில் ஆய் விகுதி முன்னிலை இடத்தையும் ஒருமையையும் காட்டிற்று. நட என்னும் பகுதி ஏவலைக் காட்டிற்று.

குறிப்பு :—ஏவற் பன்மை, உம், மின் விகுதியுடன் செய்யும், நடமின் எனவரும். இவ்வினைமுற்று, விகுதியில்லாமல் நட எனப் பகுதி மாத்திரமாகவும் வரும்.

76.—வினைச்சொற்கள் என்னென்ன வகையில் வரும் ?

வினைச்சொற்கள் உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வரும்.

77.—உடன்பாடு என்றால் என்ன ? எதிர்மறை என்றால் என்ன ?

உடன்பாடு தொழில் நடைபெறுவதைக் காட்டும்; எதிர்மறை தொழில் நடைபெறாததைக் காட்டும்.

நடந்தேன்
நடந்தான் } உடன்பாடு

நடவேன்
நடவான் } எதிர்மறை

78.—வினைமுற்றுக்களில் வேறு என்னென்ன வகையுண்டு ?

(1) தன்வினை, (2) பிறவினை, (3) செய்வினை, (4) செயப்பாட்டு வினை, (5) செயப்படுபொருள் குன்றியவினை, (6) செயப்படுபொருள் குன்றாவினை எனவும் பலவகை உண்டு.

(1) கற்றேன் .... தன்வினை
(2) கற்பித்தேன் .... பிறவினை
(3) குடத்தைச்செய்தேன்.... செய்வினை

(4) குடம் குயவனால் செய்யப்பட்டது } .... செயப்பாட்டுவினை

(5) வெட்டினான் .... செயப்படுபொருள் குன்றாவினை

(6) போனான் .... செயப்படுபொருள் குன்றியவினை.

79:—பெயரெச்சம் என்றாலென்ன?

பெயரெச்சம் என்பது திணை,பால்களைக் காட்டும் விகுதியில்லாமல் குறைச்சொல்லாய் நின்று ஒரு பெயரைக்கொண்டு முடியும் வினைச் சொல்லாம்.

உண்ட(மனிதன்)

இதில் உண்ட என்பது பெயரெச்சம்; உண்ட என்பதில்பால்காட்டும்விகுதியில்லாமை யால் பால் அறியப்படாமல் குறைச்சொல்லாய் நின்று மனிதன் என்னும் ஆண்பாற் பெயரைக்கொண்டு முடிந்தது. (முடியுஞ் சொல்லாகிய பெயர் எஞ்சி நிற்பது பெயரெச்சம்)

80—பெயரெச்சம் எத்தனை வகைப்படும்?

பெயரெச்சம்(1)இறந்தகாலப் பெயரெச்சம் (2) நிகழ்காலப் பெயரெச்சம் (3) எதிர்காலப் பெயரெச்சம் (4) எதிர் மறைப் பெயரெச்சம் என நான்குவகைப்படும்.

(1) உண்ட (மனிதன்)

உண்ட என்பதில் உண் என்ற பகுதி ட் எனும் இறந்த கால இடைநிலையும், அ என்னும் விகுதியும் பெற்றுஇறந்த காலப் பெயரெச்ச மாயிற்று. (உண்+ட்+அ=உண்ட

(2) உண்கின்ற (மனிதன்)

உண்கின்ற என்பதில் உண் என்ற பகுதி, கின்று என்னும் நிகழ்கால இடைநிலையும் அ என்னும் விகுதியும் பெற்று நிகழ்காலப் பெயரெச்சமாயிற்று.

(3) உண்ணும் (மனிதன்)

உண்ணும் என்பதில் உண் என்ற பகுதி உம்என்னும் விகுதிமாத்திரம்பெற்று எதிர்காலப்பெயரெச்சமாயிற்று. இதில் உம் விகுதியே எதிர்காலங் காட்டிற்று.

81:—எதிர்மறைப் பெயரெச்சமாவது யாது?

ஆ என்னும் எதிர்மறை இடை நிலையை இடையில் பெற்று வரும் பெயரெச்சம், எதிர் மறைப் பெயரெச்சமாம்.

(4) உண்ணாத (மனிதன்)

இதில் உண் பகுதி; ஆ எதிர்மறை இடைநிலை, த் சந்தி அ பெயரெச்ச விகுதி.

82—பெயரெச்ச விகுதிகள் எவை?

அ - உம்-இரண்டும் பெயரெச்சவிகுதிகளாம்.

| | | |
|---|---|---|
| வந்த | = | குதிரை |
| நடக்கும் | = | மனிதன் |

83.—வினை யெச்சமாவது யாது?

விகுதியால் பால் முதலியவற்றைக் காட்டாமல் வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சமாம். முடியுஞ்சொல்லாகிய வினைச்சொல் (எஞ்சியிருப்பது) குறைந்திருப்பது வினையெச்சம்.

84.—அது எத்தனை வகைப்படும்?

அது (1) இறந்தகால வினையெச்சம் (2) நிகழ்கால வினையெச்சம் (3) எதிர்கால வினையெச்சம் (4) எதிர்மறை வினையெச்சம் என நான்கு வகைப்படும்.

85.—இறந்தகால வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப்பகுதி உ-இ-ய் என்னும் விகுதிகளுள் ஏதாவது ஒன்றை ஈற்றில் பெற்று வருவது, இறந்தகால வினையெச்சம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்டு | .... | (வந்தான்) | .... | (உ) |
| ஓடி | ... | (வந்தான்) | ... | (இ) |
| போய் | .... | (வந்தான்) | ... | (ய்) |

86.—நிகழ்கால வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப்பகுதி அ என்னும் விகுதியை இறுதியிலே பெற்று வருவது, நிகழ்கால வினையெச்சமாம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் உதிக்க | (வந்தான்) | ... | (அ) |

87.—எதிர்கால வினையெச்சமாவது யாது.

ஒரு வினைப்பகுதி இன், ஆல், கால் என்னும் விகுதிகளில் ஏதாவதொன்றை ஈற்றிலே பெற்று வருவது எதிர்கால வினையெச்சமாம்

| | | | | |
|---|---|---|---|---|
| உண்ணின் | ... | (வருவான்) | ... | (இன்) |
| உண்டால் | ... | (வருவான்) | ... | (ஆல்) |
| உண்டக்கால் | .... | (வருவான்) | ... | (கால்) |

88.—எதிர்மறை வினையெச்சமாவது யாது?

ஒரு வினைப்பகுதி, ஈற்றலே உ, மல், மே என்னும் விகுதிகளைப் பெற்று இடையில் ஆ என்னும் எதிர்மறை இடை நிலையோடு வருவது எதிர்மறை வினையெச்சமாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | படியாது | (இருந்தான்) | படி | (ஆ)—(து) |
| | படியாமல் | (இருந்தான்) | ,, | (ஆ)—(மல்) |
| | படியாமே | (போனான்) | ,, | (ஆ)—(மே) |

பயிற்சி—12.

1. *அடியில் வரும் வாக்கியங்களில் தன்வினை பிறவினை படர்க்கை வினைமுற்றை எடுத்துக் காட்டு.*
   (1) *அரசன் கோயிலைக் கட்டுவித்தான்.*
   (2) *தச்சன் மரத்தை வெட்டினான்.*
   (3) *கண்ணன் ஊருக்குப் போனான்.*
2. (1) *பெயரெச்ச விகுதிகள் எவை?*
   (2) *வினையெச்ச விகுதிகள் எவை?*

3. அடியில் வரும் சொற்களில் பெயரெச்சம் எவை? வினை யெச்சம் எவை?
உண்ணாது, நடந்த, படியாமல், உறங்கி,
அடிக்கும், போய், ஓடினால், படித்த,

## 3. இடைச்சொல்.

89.—இடைச்சொல்லாவது யாது?

**பெயர்ச்சொல் வினைச்சொற்களைப் போல் தனித்து வழங்காமல், பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் அடுத்து வரும் சொல், இடைச்சொல்லாம்.**

குறிப்பு:—இடைச்சொல், பெயர் வினைகளை அடுத்து வருதலாவது அவற்றிற்கு முன்னும், பின்னும், இடையிலும் வருதல். பெயர் வினைகளை இடமாகக் கொண்டு வரும் சொல், இடைச்சொல்.

90.—இடைச்சொற்கள் எவை?

**வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடை நிலைகளும், சாரியைகளும், உவமை உருபுகளும், சுட்டும், வினாவும், தத்தம் பொருளை அறிவித்து வருவனவும் இடைச்சொற்களாம்.**

| | | |
|---|---|---|
| மரத்தை வெட்டினான் | (ஐ) | வேற்றுமை உருபு |
| படித்தான் ... | (ஆன்) | விகுதி |
| படித்தான் ... | (த்) | இடைநிலை |
| மரத்தை ... | (அத்து) | சாரியை |
| புலிபோல் பாய்ந்தான் | (போல்) | உவமை உருபு |
| அம்மனிதன் ... | (அ) | சுட்டு |
| எம்மனிதன் ... | (எ) | வினா |

91.—தத்தம் பொருளைத் தெரிவிக்கும் இடைச்சொற்கள் எவை?

**ஏ, ஓ, உம், மற்று முதலிய இடைச்சொற்கள் தத்தம் பொருளைத் தெரிவிப்பனவாம்.**

| | | | |
|---|---|---|---|
| உண்டே கடவுள் ... | (ஏ) | ... | தேற்றப்பொருள் |
| அவனே எடுத்தான் ... | (ஏ) | ... | பிரிநிலைப்பொருள் |
| ஆணோ பெண்ணோ ... | (ஓ) | ... | ஐயப்பொருள் |
| அவனோ கொடுத்தான்... | (ஓ) | ... | வினைப்பொருள் |
| இராமனும் கண்ணனும் | (உம்) | .... | எண்ணுப்பொருள் |
| மற்றொன்று தந்தான் ... | (மற்று) | | பிறிது என்னும் பொருள் |

பயிற்சி—13.

அடியில் வரும் சொற்களில் இடைச்சொற்களை எடுத்துக் காட்டி, அவை இன்ன இன்ன பொருளில் வந்தனவென்று சொல்லுக.

அவனோ கொடுத்தான்
அவனே எடுத்தான்
ஆறும், குளமும், சோலையும் ஊருக்கு அழகு.
மனிதனோ கட்டையோ.
அரசனே குடிகளுக்குக் காவல்.

## 4. உரிச்சொல்.

92.—உரிச்சொல்லாவது யாது?

**பெயர் வினைகளின் குணத்தை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்கும் சொல், உரிச்சொல்லாம்.**

குறிப்பு:—உரிச்சொல் பெயர் வினைகளை விட்டுத் தனித்து நில்லாது.

93.—உரிச்சொல் எத்தனை வகைப்படும்?

பெயருரிச்சொல், வினையுரிச்சொல் என இரண்டு வகைப்படும்.

குறிப்பு;—பெயரை அடுத்து அதனை விசேடித்து நிற்பது பெயருரிச்சொல். வினையை அடுத்து அதனை விசேடித்து நிற்பது வினை உரிச்சொல்.

| | |
|---|---|
| நனிபேதை | நனி—பெயருரிச்சொல் |
| சாலத்தந்தான் | சால—வினை உரிச்சொல் |

## III. புணரியல்.

94.—புணர்ச்சியாவது என்ன?

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடச் சேர்வதாம். இதற்குச் சந்தி என்று பெயர்.

குறிப்பு:—நிலைமொழி - முதலில் நிற்கும் சொல். வருமொழி-அதனை அடுத்துப் பின்வரும் சொல்.

95.—மொழிகள் எப்படிப் புணரும்?

இயல்பாக வேனும் விகாரமாக வேனும் புணரும். (விகாரம்-வேறுபாடு)

96.—இயல்புப்புணர்ச்சியாவது யாது?

நிலைமொழியும் (முதல்மொழியும்) வருமொழியும் யாதொரு வேறுபாடும் இல்லாமல் புணர்வது இயல்புப்புணர்ச்சியாம்.

(உ-ம்) மணி + பெரிது=மணிபெரிது
நெல் + வயல்=நெல்வயல்.

97.—விகாரப்புணர்ச்சியாவது என்ன? அது எத்தனை?

நிலைமொழியின் கடையெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடச் சேரும்போது புதிதாக அங்கு ஓரெழுத்துத்தோன்றுதலும், நின்ற எழுத்து மற்றொரு எழுத்தாகத் திரிதலும், உள்ள எழுத்துக் கெடுதலுமாம். ஆகவே அவ்விகாரம்:—

1. தோன்றல்—(எழுத்தாவது சாரியையாவது தோன்றல்)

2. திரிதல்—(நிலைமொழியீறாவது வருமொழி முதலாவது இரண்டுமாவது வேறுபடுதல்.)

3. கெடுதல்—(எழுத்துக்கள் கெடுதல்)

என மூன்று வகைப்படும்.

குறிப்பு:—நிலைமொழி வருமொழிகள் சேரும்போது இவ்விகாரங்களுள் ஒன்றையேனும், பலவற்றையேனும் அவை அடையும்.

(உ-ம்) வாழை+காய்=வாழைக்காய் (இதில் க்-எழுத்துத் தோன்றல்)
புளி + பழம்=புளியம்பழம் (இதில் அம் சாரியை தோன்றல்)
மண் + குடம்=மட்குடம் (இதில் ணகரம் டகரமாகத்திரிதல்)
மரம்+வேர்=மரவேர் (இதில் ம் கெடுதல்.)

*பனை + காய் = பனங்காய் இதில் நிலைமொழி யீற்றுயிர் ஐ கெட்டு அம் தோன்றி இதன் ஈற்று ம்-ங் எனத் திரிந்து மூன்று விகாரமும் உண்டாயின.*

## உயிரீற்றுப் புணர்ச்சி

98.—உயிரெழுத்துக்களுக்கு முன் உயிர் வந்தால் எவ்வாறு புணரும்?

**உயிரெழுத்துக்களில் இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களின் முன் உயிர்வந்தால் இடையில் யகர (உடன்படு) மெய் தோன்றும்.**

(உ-ம்) மணி + அழகு = மணியழகு ...(ய் + அ = ய)
தீ + எரிந்தது = தீயெரிந்தது ... (ய் + எ = யெ)
மலை + இடிந்தது = மலை யிடிந்தது ....(ய் + இ = யி)

99.—ஏகாரத்தின் முன் உயிர்வந்தால் எவ்வாறாகும்?

**ஏகாரத்தின் முன் உயிர்வந்தால் வகரமும் சில இடங்களில் யகரமும் தோன்றும்.**

(உ-ம்) சே + அடி = சேவடி (வ் + அ = வ)
அவனே + அழகன் = அவனேயழகன் (ய் + அ = ய)

100.—அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் இவ்வேழு உயிரெழுத்துக்குமுன் உயிர்வந்தால் எவ்வாறு புணரும்?

***அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் இவ்வேழு உயிரெழுத்துக்களுக்கு முன் உயிர்வந்தால் இடையில் வகரமெய் தோன்றும்.***

(உ-ம்) பல + அணி = பலவணி ... (வ்+அ)
பலா + இலை = பலாவிலை ... (வ்+இ)
திரு + அடி = திருவடி ... (வ்+அ)
பூ + அழகு= பூவழகு ... (வ்+அ)
நொ + அழகா= நொவ்வழகா (வ்+அ)
கோ + அழகு = கோவழகு... (வ்+அ)
கௌ + அழகு = கௌவழகு... (வ்+அ)

குறிப்பு:—உயிர்முன் உயிர்வந்தால் இரண்டும் சேரா. இந்த யகர வகர மெய்கள் இடையில் நின்று அவற்றை ஒன்று சேர்க்கின்றன. ஆகையால் இவற்றிற்கு உடன்படு மெய் என்று பெயர் (உடன்படுதல் - ஒன்று சேர்த்தல்)

101.—எ என்னும் வினவெழுத்துக்குப் பின்னும் அ, இ, உ, என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும் உயிர்வந்தால் எவ்வாறாகும்?

எ என்னும் வினவெழுத்துக்குப் பின்னும் அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்குப் பின்னும் உயிர்வந்தால் இடையில் வகரம் தோன்றும்.

(உ-ம்) எ + அணில்=எவ்வணில்...(எ+வ்=அணி)
அ + அணில்=அவ்வணில்...(அ+உ=அணில்)
இ + எடு =இவ்வேடு ...(இ+வ்=எடு)
உ + ஆடு =உவ்வாடு ...(உ+வ்= ஆடு)

102.—எ என்னும் வினவெழுத்துக்குப் பின்னும் அ, இ உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும் யகரம் ஒழிந்த மெய்யெழுத்துக்கள் வந்தால் எவ்வாறாகும்?

எ என்னும் வினவெழுத்துக்குப் பின்னும் அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்குப்

பின்னும் யகரம் ஒழிந்த மெய்யெழுத்துக்கள் வந்தால் வந்த மெய்யெழுத்துக்கள் இடையில் மிகும்.

(உ-ம்) எ + காலம் = எக்காலம்
அ + மலை = அம்மலை
இ + சட்டி = இச்சட்டி
உ + வழி = உவ்வழி

103.—உயிரெழுத்துக்களின்முன் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்கள் வந்தால் எவ்வாறாகும்.?

உயிரெழுத்துக்களின் முன் க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்கள் வந்தால் அவை பெரும்பாலும் மிகும்.

(உ-ம்) பலா + காய் = பலாக்காய் ... (க்)
ஈ + சிறகு = ஈச்சிறகு ... (ச்)
புலி + தோல் = புலித்தோல் ... (த்)
பலா + பழம் = பலாப்பழம் ... (ப்)

மெய்யீற்றுப் புணர்ச்சி.

104.—மெய்யெழுத்துக்களின் முன் உயிர் வந்தால் எவ்வாறாகும்?

மெய்யெழுத்துக்களின் முன் உயிர் வந்தால் வந்த உயிர் அந்த மெய்யெழுத்தின் மேல் ஏறும்.

உ-ம்) குடம் + உடைந்தது = குடமுடைந்தது (ம் + உ = மு)
ஊர் + அடங்கிற்று = ஊரடங்கிற்று (ர் + அ = ர)
அவன் + அழுதான் = அவனழுதான் (ன் + அ = ன)

105.—தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யெழுத்தின் முன் உயிர் வந்தால் எவ்வாறாகும்?

தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யெழுத்தின் முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டிக்கும்.

(உ-ம்) கல் + எறிந்தான் (கல் + ல் + எறிந்தான்) = கல்லெறிந்தான்
பல் + உடைந்தது (பல் + ல் + உடைந்தது) = பல்லுடைந்தது
பொன் + ஒளி (பொன் + ன் + ஒளி) = பொன்னொளி

106.—சொற்களின் ஈற்றிலுள்ள மகரம் க, ச, த, என்னும் வல்லெழுத்துக்கள் வந்தால் எவ்வாறாகும்?

அந்த மகரம் (ம்) ககரம் வந்தால், ஙகரமாகவும், சகரம் வந்தால், ஞகரமாகவும், தகரம் வந்தால் நகரமாகவும் திரியும்.

(உ-ம்) கனம் + குறைந்தது = கனங்குறைந்தது
மரம் + செடி = மரஞ்செடி
பணம் + தந்தான் = பணந்தந்தான்

107.—ய, ர, ழ என்னும் மெய்யீற்றின் முன் க, ச, த, ப வரின் எவ்வாறாகும்?

ய, ர, ழ என்னும் மெய்யீற்றின் முன் க, ச, த, ப வந்தால் பெரும்பாலும் இரட்டிக்கும்.

(உ-ம்) நாய் + கால் = நாய்க்கால்
ஏர் + கால் = ஏர்க்கால்
தாழ் + கோல் = தாழ்க்கோல்

## IV. தொடர்மொழி இயல்.

108.—தொடர்மொழி என்றால் என்ன?

பெயர், வினை முதலிய சொற்கள் ஒரு கருத்தை விளக்குவதற்கு ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்பது தொடர்மொழியாம்.

109.—அது எத்தனை வகைப்படும்?

அது 1. எச்சத் தொடர்மொழி, 2. முற்றுத் தொடர்மொழி என இரண்டு வகைப்படும்.

110.—எச்சத் தொடர்மொழியாவது யாது?

பெயர் முதலிய சொற்கள் தொடர்ந்து நின்றும் ஒரு முடிந்த கருத்தைத் தராமலிருப்பது எச்சத் தொடர் மொழியாம்.

கண்ணன் பள்ளிக்கூடம் போய்-

*இத்தொடரில் பல சொற்கள் தொடர்ந்து நின்றும் போய் 'இன்னது செய்தான்' என ஒரு கருத்தை முடிவாகத் தரவில்லை.*

111.—முற்றுத் தொடர்மொழியாவது யாது?

ஏதேனும் ஒரு கருத்து முடியும்படி சொற்கள் தொடர்ந்து நிற்பது முற்றுத் தொடர்மொழியாம்.

கண்ணன் பள்ளிக்கூடம் போய்ப் படித்தான்.

*இதில் போய் 'இன்னது செய்தான்' (படித்தான்) என்னும் கருத்து முடிவு பெற்றிருக்கிறது.*

112.—முற்றுத் தொடர் மொழிக்கு வேறு என்ன பெயர்?

வாக்கியம் என்பது.

113.—ஒரு வாக்கியம் முற்றுப்பெறுவதற்கு என்னென்ன உறுப்புக்கள் இருக்கவேண்டும்?

1. எழுவாய், (செய்பவன்) 2. பயனிலை, (அவன் செய்யும் தொழில்) 3. செயப்படு பொருள் (அந்தத் தொழிலை அடையும்பொருள்) என்னும் மூன்று உறுப்புக்கள் இருக்கவேண்டும்.

114.—எழுவாய் என்பது என்ன?

ஒரு காரியத்தைச் செய்வதற்கு முதன்மையாய் இருப்பவன்; அல்லது முதன்மையாய் இருப்பது எழுவாயாம். எழு-(வாக்கியம்) உண்டாவதற்கு, வாய்—மூலமான இடம். எழு வாய்=எழுவாய். இது முதல் எனவும் கருத்தா எனவும் பெயர் பெறும்.

115.—பயனிலை என்றால் என்ன?

எழுவாய் (கருத்தா) செய்யும் காரியத்தின் பயனைக் குறிப்பது பயனிலையாம். பயன்—பிரயோஜனம்; நிலை — நிற்கும் இடம். இது பொருள் நிலை எனவும் பெயர் பெறும்.

116.—செயப்படுபொருள் என்றால் என்ன?

எழுவாய் செய்யும் செய்கையை (பயனிலையை) அடைகிற பொருள் செயப்படுபொருளாம்.

செய்—செய்கையை; படுபொருள்—அடையும் பொருள்—செய்+படு. பொருள்.

117.—ஒரு முற்றுத் தொடர்மொழி சொல்லி, அதனுள் எழுவாய் பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் காட்டு.

குயவன் குடத்தை வனைந்தான்.

இதில் வனைதல் தொழிலுக்குக் குயவன் முதன்மையாக நின்றபடியால்'குயவன்'எழுவாய்.

குயவனாகிய எழுவாய் செய்த தொழில், வனைந்தது; ஆகையால், 'வனைந்தான்' என்பது பயனிலை.

குயவன் செய்த வனைதல் செய்கையை அடைந்த பொருள் குடம்; ஆகையால் 'குடம்' என்பது செயப்படுபொருள்.

118.—எழுவாயை வாக்கியத்தில் அறிந்துகொள்வது எப்படி?

பயனிலை உயர்திணை முடிபாயிருந்தால் யார் என்பதையும், அஃறிணை முடிபாயிருந்தால் எது என்பதையும் பயனிலைக்கு முன் வைத்துக் கேள்வி கேட்டால் அதற்கு வரும் விடையே எழுவாயென்று அறியலாம்.

வந்தான்

இப்பயனிலைக்கு முன் 'யார்' என்று கேட்டால் 'அவன்' என்று விடை வரும்; வரவே 'அவன்' என்பது எழுவாயாம்.

119.—எழுவாய் எல்லா வாக்கியங்களிலும் வெளிப்படை கவே இருக்குமோ?

சில வாக்கியங்களில் எழுவாய் வெளி படையாய் இல்லாமல் மறைந்தும் இருக்கு அதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

120.—எப்படி அறிந்து கொள்ளலாம்?

'நாளைவா'—இதனுள் 'வா' என்ற பய லைக்கு முன் 'யார்' என்னும் சொல்லை வைத் 'யார் வா' என்று கேட்டால் 'நீ' என்பது வி யாக வரும். அதுவே எழுவாய் என்று அறி கொள்ளலாம்.

121.—இப்படி வரும் எழுவாய்க்குப் பெயரென்ன?

'தோன்ரு எழுவாய்' என்பது. (தோன் வெளிப்படையாய்த் தெரியாத.)

122.—எழுவாய், வாக்கியத்தில் எவ்விடத்தில் நிற்கும்?

எழுவாய், வாக்கியத்தில் பெரும்பாலு முதலிலேயே நிற்கும். சிறுபான்மை எழுவா தனக்கு முன் சில அடைமொழிகள் வர, தா அவற்றிற்குப் பின்னும் நிற்கும்.

123.—எழுவாய் இடையில் நிற்பதை உதாரணத்தால் விளக் காட்டு?

'நல்ல அறிவுள்ள பையன் பெற்ருேர்க்குக் கீழ்ப்படி நடப்பான்'.